# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 8 நாள்: 28.11.2019

### உள்ளாட்சி தேர்தல் நடத்துவது குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் கலந்தாலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்கள் நடத்துவது குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர். இரா.பழனிசாமி, இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையில் 28.11.2019 அன்று முற்பகல் 11.30 மணியளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அகில இந்திய திரிணாமூல் காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், தேசியவாத காங்கிரஸ், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்கிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

உள்ளாட்சித் தேர்தல்களை நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடத்திட தங்களது கருத்துகளை தெரிவிக்குமாறு ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்கண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டு நடப்பில் உள்ள சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களில் உள்ள விவரங்களைக் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும், கூட்டத்தில் அரசியல் கட்சி பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்தில் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டவாறு தேர்தல் அறிவிக்கப்படும் என்றும், அதற்கான ஒத்துழைப்பினை அனைத்து அரசியல் கட்சிகளும் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., மற்றும் மாநில தேர்தல் அலுவலர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் முனைவர் கா. பாஸ்கரன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இயக்குநர் டாக்டர் கே.எஸ் பழனிசாமி,இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.சு. பழனிச்சாமி, இ.ஆ.ப., சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியின் ஆணையர் திரு.ஜி பிரகாஷ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் .இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்தார்

28/11/19

மக்கள் தொடர்பு அலுவலர்